இந்திய உச்ச நீதிமன்றம்

மார்ச் 02, 2023

<u>முன்னிலை</u>

மாண்புமிகு நீதியரசர் திரு. எஸ். ரவீந்திரபட்,

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு. திபங்கர் தத்தா,

உரிமையியல் மேல்முறையீடு எண் 6216/ 2012

சூப்பர் டயமண்ட் டூல்ஸ் மற்றும் பலர் ... மேல்முறையீட்டாளர்(கள்)

-எதிர்-

கே. மோகன்ராவ் ... எதிர்மேல்முறையீட்டாளர்(கள்)

<u>தீர்ப்புரை</u>

<u>மாண்புமிகு நீதியரசர் திரு. எஸ். ரவீந்திரபட்:-</u>

1. தற்போதைய மேல்முறையீடானது மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தின் கற்றறிந்த தனி நீதிபதியின் முடிவுகளை ரத்து செய்து சென்னை உயர்நீதிமன்றத்தின் ஈராயம் பிறப்பித்த உத்தரவைக் கேள்விக்குள்ளாக்குகிறது. இசைவு பொதுவர் மற்றும் இசைவிணக்கச் சட்டம், 1996-ன் பிரிவு 34-ன் கீழ் எதிர்மேல்முறையீட்டாளர் தாக்கல் செய்த மனுவை மாண்புமிகு தனிநீதிபதி அவர்கள் தள்ளுபடி செய்தார். மாண்புமிகு ஈராயம் மாண்புமிகு தனிநீதிபதி அவர்களின் உத்தரவை ரத்து செய்து புதிய இசைவு முறைத்

தீர்ப்பாளரை நியமித்து உத்திரவிட்டது.

2. சென்னை உயர் நீதிமன்றத்தின் பார்வைக்கு அனுப்பப்பட்டு 28.08.1997-ல் இந்த வழக்கில் உத்திரவு பிறப்பிக்கப்பட்டது. இந்தவழக்கானது இருதரப்பினருக்கிடையே பங்குதாரர் கணக்கு சம்பந்தமாக ஏற்பட்ட பிரச்சனை. மேல்முறையீட்டாளரின் எஞ்சியிருக்கும் பங்குதாரர் முதல் எதிர்மேல்முறையீட்டாளர் பொய்கணக்குகளை புனைதல் மற்றும் பெரும் தொகையை மோசடி செய்ததால் குற்றவாளி என்று குற்றம் சாற்றினார். இருத்தரப்பினர்களுக்கிடையேயான பிரச்சனையை இணக்கமாக தீர்க்கும் யோசனையுடன் இருத்தரப்பினர்கள் ஒரு சமரச வார்த்தை தொடங்கினார்கள். ஆனால் தீர்வு ஏற்படவில்லை. இதன் விளைவாக எதிர்மேல்முறையீட்டாளர் இசைவு பொதுவர் மற்றும் இசைவிணக்கச் சட்டம் 1996, பிரிவு 11-ன் படி உயர் நீதிமன்றத்தை அனுகினார்.

3. ஒரு தனிநடுவர் அடங்கிய இசைவுத் தீர்ப்பாயம் வாதுரைகள் மற்றும் சாட்சியங்களின் அடிப்படையில் 1-ம் எதிர்மேல்முறையீட்டாளர் குற்றவாளி என்று உறுதிச்செய்து தீர்ப்பளித்தது. மேல்முறையீட்டாளர் ஆதியில் உரிமைகோரவில்லை என்றாலும் 1-ம் எதிர்மேல்முறையீட்டாளரால் தொடரப்பட்ட இசைவுத்தீர்வு நடுவர் நடவடிக்கையின் போது எதிர் கோருரிமைக் கோரினார். இசைவுத் தீர்வுமன்றம் அதன் தீர்வின் அடிப்படையில் மொத்தத் தொகையான ரூ.76,34,423.86/-ஐ முறையாகக் கணக்கிட வேண்டும் என்றும் அதில் 1-ம் எதிர்மேல்முறையீட்டாளாரின் பங்குத் தொகையை கழித்து மொத்தம் ரூ.53,87,664.40/- என்று தீர்ப்பளித்தது.

4. மேலும் நடுவர் 31.01.1994 முதல் இசைவுத் தீர்வு நடவடிக்கைகள் தொடங்கும் தேதிவரை வருடம் ஒன்றுக்கு 18 சதவீதம் வட்டியும் அதே விகிதத்தில் எதிர் கால

வட்டியையும் செலுத்துமாறு உத்திரவிட்டார். 1-ம் மேல்முறையீட்டாளர் இசைவுப் பொதுவர் மற்றும் இசைவிணக்கச் சட்டம், 1996-ன் பிரிவு 34-ன் கீழ் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் கற்றறிந்த தனி நீதிபதியின் முன்தாக்கல் செய்த மனுவை மாண்புமிகு தனி நீதிபதி நிராகரித்தார். எனவே 1-ம் எதிர்மேல்முறையீட்டாளர் சென்னை உயர்நீதிமன்றத்தின் ஈராயத்தை அனுகியதில், மாண்புமிகு ஈராய நீதிபதிகள் கற்றறிந்த தனிநீதிபதி பிறப்பித்த உத்தரவு பொதுக்கொள்கைக்கு எதிராக இருப்பதால் நீடிக்கத்தக்கதல்ல என்று தடைவிதித்து உத்திரவிட்டது. மேலும் முடிவாக ஈராயம் இசைவுத் தீர்பாய நடுவர் பின்பற்றிய முறையை பின்னோக்கிச் சென்று 21 ஆண்டுகள் காலக்கணக்குகளை எடுத்துக் கொண்டது நிலைக்கத்தக்கதல்ல என்றும் கருத்துத் தெரிவித்து உத்தரவிட்டது.

5. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. மேல்முறையீட்டாளர் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு. ஆனந்தபத்மநாபன் நடுநிலை தணிக்கையாளரை நியமிப்பதற்கு இருத்தரப்பினரும் ஒப்புக்கொண்டதாக சமர்ப்பிக்கப்பட்டு, இருதரப்பினர்களும் அவரவர் சொந்தக் கணக்காய்வாளர்களால் உதவிச்செய்யப்பட்டு ஒருமித்த அடிப்படையில் கணக்கியலில் பின்பற்றப்பட்ட முறை எட்டப்பட்டது. இந்த உள்ளடக்கம் நடுவர் நீதிமன்றத்தால் புறநிலையாகக் கருதப்பட்டு முதல் எதிர்மேல்முறையீட்டாளர் முதலில், அதிக விலைப்பட்டியல் மற்றும் இரண்டாவதாக, ரகசியமாக வர்த்தகம் செய்ததின் விளைவாக கூட்டாண்மை நிறுவனத்திற்கு நட்டம் ஏற்படுத்தியுள்ளதால் குற்றவாளி என முடிவு செய்து, மேற்பட்ட முடிவின் அடிப்படையிலும் ஒப்புக்கொள்ளப்பட்ட நடுநிலைமை தணிக்கையாளரின் கணக்கீடுகளின் அடிப்படையிலும் புள்ளி விவரங்கள் இசைத்தீர்ப்பாயத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த சூழ்நிலையில் உத்திரவானது பொதுக் கொள்கைக்கு எதிரானது என்று 1ஆம் எதிர்மேல்முறையீட்டாளரால் வாதுரைத்தது

தவறு என்று வாதிடப்பட்டது.

6. கற்றறிந்த வழக்கறிஞர் மேலும் காலவரையறை சட்டம் 1963, பிரிவு 17-ன் படி இந்த வழக்கில் எதிர் கோரிக்கையில் மோசடிக்குற்றம் சாற்றப்பட்டு நடுவரால் தீர்வுக்காணப்படாததால் நடுவரின் தீர்ப்பில் தவறு கண்டறியப்படவில்லை. எனவே இசைத் தீர்ப்பாயத்தின் நடுவரின் தீர்ப்பில் பொதுக் கொள்கைக்கு முரணான சட்டப் பிழை ஏதும் இல்லை என்றும் வாதுரைக்கப்பட்டது.

7. முதல் எதிர்மேல்முறையீட்டாளரின் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. ஜோஸ் மேல்முறையீட்டாளர் உண்மையில் இந்த வழக்கைப் பார்வைக்கு வைக்கவில்லை என்றும், 1ஆம் எதிர்மேல்முறையீட்டாளர் தான் தன் உரிமைக் கோரிக்கையை முன்வைத்தார் என்பதையும் சுட்டிக்காட்டி மிக முக்கியமாக இந்த வழக்கில் உண்மையில் மேல்முறையீட்டாளருக்கு குறிப்பிட்டுள்ள அதிக விலைப்பட்டியல் மற்றும் பிற முறைக்கேடுகள் பற்றி நன்கு அறிந்திருக்க வேண்டும் என்றும் அது தான் முதல் எதிர்மேல்முறையீட்டாளரை 1993-ம் ஆண்டில் கூட்டாண்மை நிறுவனத்திலிருந்து வெளியேற்றக் காரணமாக இருந்தது என்றும் வாதுரைத்தார்.

8. 1-ம் எதிர்மேல்முறையீட்டாளர் கற்றறிந்த வழக்கறிஞர் இருத்தரப்பினருக்கும் இடையேயான கடித பரிமாற்றத்தைச் சார்ந் 1994-ம் ஆண்டு பிப்ரவரி 2-வது வாரத்தில் நல்லிணக்கக் கோரிக்கை முன்வைக்கப்பட்டதாக வாதிட்டார். எனவே 1997-ம் ஆண்டு கோரிக்கையை முன்வைத்த போது மேல்முறையீட்டாளர் தனது எதிர்கோரிக்கையை 1997-ம் ஆண்டு டிசம்பர் மாதம் தான் முன்வைத்தார். எனவே காலவரையறைச் சட்டம் பிரிவு-17ன் படி மேல்முறையீட்டாளரின் கோரிக்கை காலாவதியாகியுள்ளது.

9. 21 ஆண்டுகளின் கணக்குகளின் அடிப்படையில் பொறுப்புக்களை நிறுத்தி வைக்க கற்றறிந்த தனி நீதிபதியின் தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டது என்றும் ஈராயம் மேலும் இசைவு முறை தீர்ப்பாளர் நியமிக்கப்பட்ட பின்புதான் மேல்முறையீட்டாளர் எதிர் கோருரிமை தாக்கல் செய்துள்ளார் என்பதையும் கருத்தில் கொண்டது என்றும் மேலும் வழக்கு கோப்புகளிலிருந்த எதிர் கோருரிமையின் அடிப்படையில் 1-ம் எதிர்மேல்முறையீட்டாளர் 1993-ம் ஆண்டு டிசம்பர் மாதமே பங்குதாரர் நிறுவனத்திலிருந்து பங்குதாரராக செயல்படுவதை நிறுத்தியுள்ளார் என்பதை ஈராயம் கண்டறிந்தது. 1994-ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் பகுதியிலேயே தரப்பினர்களிடையே பிரிவு தெரிந்திருந்த போதிலும் உண்மையில் மேற்படி காலம் முதல் 1997-ம் வருடம் டிசம்பர் மாதம் வரையில் மேல்முறையீட்டாளர் தரப்பில் தனது கோரிக்கையை வலியுறித்தி எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் எதிர்கோருரிமையின் வாதுரையிலும் மோசடி குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக குறிப்பு ஏதும் இல்லை. இருந்த போதிலும், ஒருபுறம் அதிகவிலைப்பட்டியல் மற்றும் வைரம் போன்ற மூலப்பொருட்களை எதிர்மேல்முறையீட்டாளர் மனைவியின் வணிகத்திற்கு திருப்பியதன் விளைவாக கூட்டாண்மை நிறுவனத்தின் லாபம் குறைந்துவிட்டதே, எதிர்கோருரிமை இறுதியில் வெற்றிப் பெற்றதற்குக் காரணம் ஆகும்.

10. மேலும் எதிர்கோருரிமையின் வாதுரையின் முக்கிய உள்ளடக்கமானது, மேல்முறையீட்டாளர் பங்குதாரர் நிறுவனத்தை விட்டு வெளியேறிய 6 மாதங்களுக்குள் முதல் எதிர்மேல்முறையீட்டாளர் ஒரு புதிய நிறுவனத்தை நிறுவினார் என்பதே குற்றச்சாட்டாகும் என்றும் காலவரம்பு சட்டம் பிரிவு 17- இல் காலவரம்பானது வழக்குமூலம் ஏற்பட்ட தேதியிலிருந்து கணக்கிடப்படும் விதியிலிருந்து விலக்காக உள்ளது.

எவ்வாறாயினும் பிரிவு 17-ன் கீழ் உள்ள நிபந்தனை - மோசடி போன்ற குற்றங்களில் ஆதராத்திற்குப்பட்டு (குறிப்பிட்ட வாதுரையின் அடிப்படையில்) வரம்புக்கான தொடங்கும் தேதியானது வாதியின் பார்வைக்கு மோசடி வந்த தேதியாகும் என்றும், ஸ்ரீவல்லப் கிளாஸ் ஒர்க்ஸ் லிமிடெட் –எதிர்- யூனியன் ஆப் இந்தியா[1] மற்றும் கமிஷனர் ஆப் சேல்ஸ் டாக்ஸ், உ.பி. எதிர் அவுரியா சேம்பர்ஸ் ஆப் காமர்ஸ், அலகாபாத்[2] ஆகிய இந்நீதிமன்றத்தின் முன் தீர்ப்புகளில் இந்நீதிமன்றம் தொடர்ந்து பின்பற்றிய கொள்கை, மோசடி அல்லது அத்தகைய மற்றும் தவறான செயல்கள் பற்றிய அறிந்த தேதி கால வரம்புக்கான தொடக்கப்புள்ளியாகும் என்றும் தீர்ப்பளித்தது. மேலும் ர. ராதாபாய் மற்றம் மற்றவர்களில் எதிர் P. அசோக்குமார் மற்றும் மற்றவர்கள்[3] காலவரையறைச் சட்டம் பிரிவு 17ன் படி "காலவரம்பு நீடிக்கவோ அல்லது மீறலோ இல்லை. இது கால வரம்பு காலத்தை மட்டும் ஒத்திவைக்கிறது அல்லது மாற்றி வைக்கிறது" இதுவானது "காலவரம்பு இயங்க தொடங்க வில்லை" என்ற பிரிவு 17-இல் உள்ள சொற்றோடரிலிருந்து தெளிவாகிறது.

11. எஞ்சியிருக்கும் பங்குதாரர் மேல்முறையீட்டாளர்கள் மோசடி நடந்ததாக தனக்கு தெரிந்த நாளிலிருந்து 3 ஆண்டுகளுக்கு பிறகு தனது உரிமை கோரலை செய்திருப்பது கருத்தில்கொண்டு ஏற்கனவே வழங்கிப் பிறப்பிக்கப்படட்ட குறையுற்ற ஆணையை மேல்முறையீட்டுக் காலக்கட்டத்தில் ரத்து செய்து உத்திரவிட்டுள்ளதில் எவ்வித சட்டவிதி மீறரலும் இல்லை என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

12. மேற்கூறிய காரணங்களுக்காக மேல்முறையீடு தோல்வியடைந்து, அதன்படி தள்ளுபடி செய்யப்படுகிறது. நிலுவையில் உள்ள விண்ணப்பங்கள், ஏதேனும் இருந்தால்

---

1 [1984] 3 SCR 180
2 [1986] 2 SCR 430
3 [2018] 12 SCR 143

அவைகள் அப்புறப்படுத்தப்படும்.

மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது

<u>பொறுப்புத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும். "